பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

# நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

மலர்: 15] சென்னை: பங்குனி 7 (20-3-68) புதன் ★ வெளியூர்: பங்குனி 8 (21-3-68) வியாழன் [இதழ்: 232

குடும்பக் கட்டுப்பாடு செய்திடுவீர்

பிள்ளையோ பிள்ளை தொல்லையோ தொல்லை என்னின்ற நிலை ஏற்படாமல், குடும்பம் தெவிட்டாத இன்பமாக விளங்கவும், குழந்தைகள் அறிவு நிறைந்து ஆற்றல் மிகுந்தவர்களாக இருக்கவும் அளவோடு பெற்று வளமோடு வாழுங்கள்.

## இந்தியாவிலேயே சிறப்பாக இயங்கும் தமிழகக் காவல் துறை

### சட்டம்--ஒழுங்கைக் காக்க ஆற்றிடும் அரும் பணிகள்

### முதலமைச்சர் அண்ணா தரும் விவரம்

சென்னை, மார்ச் 20—

"சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநிறுத்துவதற்கு வன்மையும் திறமையும் வாய்ந்ததொரு காவல்துறை இன்றியமையாததாகும். தமிழ்நாட்டுக் காவல்துறை நாட்டிலேயே மிகச் சிறந்த நிறுவனம் என்ற நற்பெயரைத் தொடர்ந்து காத்துவருகிறது.

"நான்காவது பொதுத் தேர்தல்கள்—வேலைநிறுத்தங்கள்—மாணவர் கிளர்ச்சிகள்—வகுப்புவாத கிளர்ச்சிகள் ஆகியவை குறித்த பணிகளில் காவலர்கள் ஆழ ஈடுபட்டிருந்தபோதிலும், குற்றங்கள் கட்டு மீறாமலிருந்தன; சட்டமும் ஒழுங்கும் சரிவரக் காக்கப்பட்டன, காவல் படையினரின் ஒழுங்கும், கட்டுப்பாடான மன உறுதியும் எப்போதும்போல் உயர்ந்த நிலையில் இருந்தன.

"காவல் துறையினருக்கும்—பொதுமக்களுக்குமிடையே நிலவும் நல்லுறவை மேம்படுத்தவும், காவல் துறையினர் தங்கள் கடமைகளை இன்னும் செவ்வியமுறையில் நிறைவேற்றுவதற்கும் உதவியாக இப்பேரவையில் மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் ஆன்ற கருத்துக்களை எடுத்தியம்பினால் அவற்றை அரசு வரவேற்கும்"

என்று, முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள், இன்று சட்டமன்றத்தில் தெரிவித்தார்.

காவல்துறை மானியக் கோரிக்கையை முன்வைத்து அண்ணா அவர்கள் அளித்த ஆய்வுரையில் மேலும் தெரிவித்திருப்பதாவது:—

#### வழக்குகள் எண்ணிக்கை குறைந்ததற்குக் காரணம்

சிறப்புச் சட்டங்களின்கீழும் உள்ளூர்ச் சட்டங்களின் கீழும் தொல்லை உண்டாக்குவதுபற்றி இந்தியத் தண்டனைச் சட்டத் தொகுப்பில் கண்டுள்ள பிரிவுகளின்கீழும் நிகழ்ந்த சிறு குற்றங்கள் நீங்கலாக 1966-ம் ஆண்டில் நீதிமன்ற வரம்பிற்குட்பட்ட வழக்குகள் 56,836-ஆக இருந்ததற்கு மாறாக, 1967-ம் ஆண்டில் 54,331-ஆக இருந்தன.

வழக்குகளின் எண்ணிக்கையில் 2,505 குறைந்துள்ளதாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பொருளாதார முன்னேற்றமும், குற்றவாளிகளின்மீது திறமையான கண்காணிப்பும் சட்டத்தின் தடைக்காவற் பிரிவுகள் உரிய முறையில் பயன்படுத்தப்படுவதும், திருட்டுச் சொத்துக்களைப் பெற்றுக்கொள்பவர்களை விடாமுயற்சியுடன் பிடிப்பதும் இதற்கான காரணங்கள் எனக் கூறலாம்.

#### சிந்தை குளிரும் வகையில் செயல்படுத்தப்பட்டது

இந்த ஆண்டில் துப்புத்துலக்கப்பட்ட மதுவிலக்கு வழக்குகளின் மொத்த எண்ணிக்கை 1,59,347 ஆகும். இந்த எண்ணிக்கை 1966-ல் 1,60,029-ஆக இருந்தது. துப்புத்துலக்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கையில் 682 அல்லது 0.4 சதவிகிதம் குறைந்துள்ளது. மாவட்டத்திலும் சரகத்திலும் இயங்குகின்ற காவல் தொகுதியினர் கள்ளத்தனமாகச் சாராயம் காய்ச்சப்படும் இடங்களில் அடர்ந்து தங்கள் நாட்டத்தைச் செலுத்தினர். இந்த ஆண்டில் மதுவிலக்குச் சட்டம் சிந்தை குளிரும் வகையில் செயல்படுத்தப்பட்டது.

#### குடியிருப்பு வசதி

"காவல் படையினரின் திறனையும், ஒழுங்குணர்ச்சியும் வளர்க்கும் வகையும், அப்படையினருக்கு அரசாங்க உறைவிடங்கள் ஏற்படுத்திக் கொடுப்பதற்கான திட்டம் ஒன்று தொடங்கப்பட்டது; அவர்களில் 80 சதவிகிதத்தினருக்காவது அரசாங்க உறைவிடங்கள் ஏற்படுத்தித் தரவேண்டுமென்பதே இதன் நோக்கமாகும்.

## திருமங்கலம் மருத்துவமனைப் பணியாளர் வீடுகள்

சென்னை, மார்ச் 19—

"திருமங்கலம் அரசினர் மருத்துவமனையில் பணியாற்றுவோருக்கு வீடுகட்டும் திட்டம் ஒத்திவைக்கப்பட்டுள்ளது. நிதி நிலை சீர்பட்டதும், அது செயல்படுத்தப்படும்" என்று சட்டமன்றத்தில், மருத்துவத்துறை அமைச்சர் திரு. சாதிக்பாட்சா தெரிவித்தார்.

## கோவை ஆலைகளைத் திறக்க அரசு முயற்சி

சென்னை, மார்ச் 19—

"முன்பு கோவையில் மூடப்பட்ட ஆலைகளைத் திறப்பதற்குக் கூடுமான எல்லா ஏற்பாடுகளையும் இந்த அரசு செய்தது.

"கோவையில் உள்ள ஆலைகள் உற்பத்தி செய்த நூல்—ரூ. 6 கோடி முதல் 9 கோடி வரை மதிப்புள்ளது—விற்பனையாகவில்லை—தேங்கிக் கிடக்கிறது என்று ஆலை முதலாளிகள் கூறுகிறார்கள்; 'அப்படியெல்லாம் ஒன்றும் இல்லை' என்று தொழிலாளர் பிரதிநிதிகள் கூறுகிறார்கள்.

"நூல் விற்பனையாகாமல் கிடப்பதால், 10 நாட்களுக்கு ஆலைகளை மூடி, பின்பு திறப்பதுதான் எங்கள் நோக்கம்—என்று முதலாளிகள் கூறுகிறார்கள்; 'இந்தப் பத்து நாட்களுக்கு ஆலைகளை மூடினால், தொழிலாளர்கள் பாதிக்கப்படுவார்கள்' என்று தொழிலாளர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

"இந்த நிலையில், அவர்கள் இருதரப்பாரையும் அழைத்துப் பேசுவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன"

--முதலமைச்சர் அண்ணா
(சட்டமன்றத்தில்)

## தமிழக அரசின் நிதி நிலை அறிக்கை

### விளக்கக் கூட்டங்கள்

தமிழக அரசின் நிதி நிலை அறிக்கை பற்றியும், ஓராண்டுச் சாதனைகள் பற்றியும் பொதுமக்களுக்கு விளக்குவதற்கான கழகக் கூட்டங்கள்

### 7-4-68 ஞாயிறன்று நாடெங்கும் நடைபெறும்

கூட்டங்கள் நடைபெறும் இடங்களும் கலந்து கொள்ளும் சொற்பொழிவாளர்கள் விவரமும் பின்னர் வெளியிடப்படும்.

## எட்டாம் வகுப்புவரை இலவசப் பாட நூல்

### மேலும் 15,000 குழந்தைகட்கு நண்பகலுணவு

### மாநகராட்சிமன்றத்தின் சீரிய கல்விப் பணி-- வி. முனுசாமி அறிவிப்பு

சென்னை, மார்ச் 19—

"1968—69-ஆம் ஆண்டில், 6-முதல் 8-வரையிலான வகுப்புகளில் பயிலும் பிள்ளைகளுக்கும் இலவசப் பாட நூல்களும், நோட்டுப் புத்தகங்கள் முதலியனவும் வழங்கப்படும்"

என, மாநகராட்சி வரவு-செலவுத் திட்டத்தை மாநகராட்சிமன்றத்தில் வைத்து உரையாற்றிய மத்தியக் குழுத் தலைவர் திரு. வி. முனுசாமி அறிவித்தார்.

ஏற்கனவே, 1 முதல் 5 வரையிலான உருப்புகளில் பயிலும் பிள்ளைகட்கு இலவசமாகப் பாட நூல் வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டுவருகிறது; இத்திட்டத்தை சென்ற ஆண்டு முதலமைச்சர் அண்ணா அவர்கள் துவக்கி வைத்தார்கள்.

இப்போது இரண்டாம் கட்டமாக (6 முதல் 8-ஆம் வகுப்பு வரை) நூல் வழங்கும் பணிக்கு ரூ. 3 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

மத்தியக் குழுத் தலைவர் வி. முனுசாமி அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:—

ஏழைப்பிள்ளைகட்குச் சீருடை வழங்குவதற்காக மத்தியக் குழு ரூ. 5 இலட்சம் ஒதுக்கியுள்ளது.

இப்போது மாநகராட்சிப் பள்ளிகளில் பயிலும் பிள்ளைகளில் 35,000-பேர்கட்கு நண்பகலுணவு அளிக்கப்படுகிறது; மேலும் 15,000 குழந்தைகட்கு அளிக்க ரூ. 2-இலட்சம் கூடுதலாக ஒதுக்கப்பட்டுள்ளது.

## சேரன்--செங்குட்டுவன் சிலை!

### திரு. வி. க.-வுக்கும் சிலையெடுக்கப்படும்

"இமயஞ்சென்று தமிழ்க்கொடி நாட்டி—கல்லெடுத்துத் தமிழகம் மீண்டு—கண்ணகிக்குச் சிலை எடுத்த சேரன் செங்குட்டுவனுக்குச் சிலை எடுக்கத் தமிழ் நெஞ்சம் படைத்த மத்தியக் குழு தவறவில்லை.

சேரன் செங்குட்டுவனுக்குச் சிலை எடுக்க ரூ. 50,000 ஒதுக்கப்பட்டுள்ளது.

36-வது கோட்டம், நியுபாரன்ஸ் சாலை, கலைஞர் கருணாநிதி பூங்காவில் தமிழ்த் தென்றல் திரு. வி. கலியாணசுந்தரனார்க்குச் சிலை எடுக்க ரூ. 25,000 ஒதுக்கப்பட்டுள்ளது.

நாட்டிற்குச் சேவை செய்த செம்மல்களின் திருவுருவச் சிலைகளை நம் பின் சந்ததியினர் காணுந்தோறும் நல்லுணர்வு பெறுவர் என்பது திண்ணம்."

## ஆந்திரகேசரிக்குச் சிலை எடுக்கப்படும்

### அண்ணா கருத்தை ஏற்று மாநகராட்சி முடிவு

"நம் அண்டை மாநிலமாகிய ஆந்திர மாநிலத்திற்குத் தமிழக அரசின் முதலமைச்சர் மாண்புமிகு பேரறிஞர் அண்ணா அவர்கள் அண்மையில் சென்றிருந்தபோது, ஆந்திரமும்-தமிழகமும் ஒருங்கிணைந்த மாநிலமாக இருந்த காலத்தில் அதன் முதல்வராக இருந்து அரும்பணியாற்றிய ஆந்திரகேசரி டி. பிரகாசம் அவர்களுக்குச் சிலை எடுக்கப்படும் என்று கூறினார்கள்.

1968—69-ம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் ரூ. 40,000: ஒதுக்கியுள்ளது மத்தியக் குழு, ஆந்திர சட்டமன்றத்தில் தமிழும், தமிழகச் சட்டமன்றத்தில் தெலுங்கும் ஒலிக்க ஆரம்பித்துள்ளன; இதுவும் நல்ல சூழ்நிலைக்கு உகந்ததேயாம்!

## 'மதராஸ் ஸ்பெஷல் போலீசு'

சென்னை, மார்ச் 19—

'மலபார் ஸ்பெஷல் போலீசு' என்பதை, 'மதராஸ் ஸ்பெஷல் போலீசு' என்று மாற்ற வேண்டுமென ஏற்கனவே சட்டமன்ற மதிப்பீட்டுக் குழு அரசுக்குப் பரிந்துரைத்திருந்தது; இதனால் அரசுக்கு எவ்விதச் செலவும் ஆகாது என்பதையும் குறிப்பிட்டு மீண்டும் இந்தப் பரிந்துரையை வற்புறுத்தியிருக்கிறது.

சட்டமன்ற 1967—68-ஆம் ஆண்டைய மதிப்பீட்டுக் குழுவின் மூன்றும் அறிக்கையை சட்டமன்றக் கூட்டத்தில், குழுவின் தலைவர் திரு. எஸ். இராமச்சந்திரன் அளித்தார்.

# தரம் குறைந்த தங்கக் கட்டுப்பாடு

## 20 இலட்சம் மக்களுக்கு எமனாக வந்த திட்டம்

## உடனே நீக்குமாறு இரா. செழியன் கோரிக்கை

புதுடில்லி, மார்ச் 14—

தங்கக் கட்டுப்பாட்டுத் திட்டத்தை அறவே நீக்குமாறு நாடாளுமன்ற உறுப்பினர் திரு. சேவியர் கொண்டுவந்த தனி நபர் தீர்மானத்தின்மீது தி. மு. கழக உறுப்பினர் தோழர் இரா. செழியன், நாடாளுமன்றத்தில் பேசிய பேச்சின் சுருக்கமாவது :—

### அன்று ஆதரித்த அமைச்சர் இன்று எதிர்க்கக் காரணம்?

"தங்கக் கட்டுப்பாட்டுத் திட்டம் பற்றிய விவாதம் கட்சிகளுக்கு அப்பாற்பட்டதாகும்; அதே போலத்தான், எனக்கு முன்பாகப் பேசிய இரு காங்கிரசுக்காரர்கள் திரு. டி. சி. சர்மாவும், திருமதி தாரகேசுவரி சின்காவும், 'தங்கக் கட்டுப்பாட்டுச் சட்டம் நீக்கப்பட வேண்டும்' என்று பேசினார்கள்.

தங்கக் கட்டுப்பாட்டுத் திட்டம், 1963—ல் கொண்டுவரப்பட்ட போது, காங்கிரசு உறுப்பினர் திரு. டி. சி. சர்மா, இன்று போலவே அன்றும் எதிர்த்துப் பேசினார்; ஆனால் திருமதி தாரகேசுவரி சின்கா, அன்று துணை அமைச்சராக—அதிலும் நிதித்துறையின் துணை அமைச்சராக இருந்து அந்தத் திட்டத்துக்கு ஆதரவு தந்தார்; இன்று அவர் எதிர்க்கிறார்; 'திட்டத்தின் குறிக்கோள் நிறைவேறவில்லை' என்று அவரே ஒப்புக்கொள்கிறார்!

### குறிக்கோள் நிறைவேறியதா?

தங்கக் கட்டுப்பாட்டுத் திட்டம் மூன்று முக்கிய குறிக்கோள்களுக்காகக் கொண்டுவரப்பட்டது :—1. தங்கம் கள்ளக் கடத்தலில் வருவதைத் தடுத்து, வெளி நாட்டுச் செலாவணியைச் சேமிப்பது; 2 பதுங்கிக் கிடக்கும் தங்கத்தை வெளிக் கொண்டுவருவது; 3. தங்கத்தின் மீதுள்ள மோகத்தையும், அதன் விலையையும் குறைப்பது.

இந்தக் குறிக்கோள்கள் நிறைவேறியிருந்தால், தங்கக் கட்டுப்பாட்டுத் திட்டத்துக்கு எதிர்ப்பு வந்திருக்காது!

### நகைத் தொழிலாளர்களைத் தண்டிக்கும் விசித்திரம் இது!

தங்கக் கள்ளக் கடத்தலைத் தடுக்கவேண்டும் என்பதில் யாருக்கும் கருத்து வேறுபாடு இருக்க முடியாது. தங்கத்தில் மட்டுமல்ல—வேறு எந்தப் பொருளில் கள்ளக் கடத்தல் நடைபெற்றாலும், அதைக் கடுமையாகத் தடுக்கவேண்டும்.

கள்ளக் கடத்தலைத் தடுப்பதற்குச் சட்டத்தை வலுப்படுத்தி—கண்காணிப்பு நிர்வாகத்தை கடுமையாக்கி—கள்ளக் கடத்தல்காரர்களைச் சரியாகத் தண்டிக்க வேண்டும்.

கள்ளக் கடத்தல்காரர்களைத் தண்டிப்பதற்குப் பதில் நகைத் தொழிலாளர்களைத் தண்டிப்பதில் பலன் இல்லை?

கள்ளக் கடத்தலைச் செய்வது நகைத் தொழிலாளர்கள் அல்லர்!

வெளிநாட்டு வியாபாரத்தில் ஈடுபட்டு, ஏற்றுமதி—இறக்குமதி கணக்குகளில் ஏமாற்று வித்தைகளைச் செய்பவர்கள், கள்ளத்தனம் செய்யப்பட்ட வெளிநாட்டுச் செலாவணியை வைத்துத் தங்கத்தை அங்கு வாங்கி இங்கு கள்ளத்தனமாகக் கொண்டுவருகிறார்கள்!

வெளிநாட்டுச் செலாவணியில் நடைபெறும் மோசடி தடுக்கப்படாத வரையில் கள்ளக் கடத்தலை நிறுத்தமுடியாது!

கோடீசுவரர்களும் குட்டி குபேரர்களும் செய்கிற மோசடிக்காக, இலட்சக்கணக்கான நகைத் தொழிலாளர் தண்டிக்கப்பட வேண்டுமா என்று கேட்கிறேன்.

### தங்க மோகம் தணிய...!

தங்கத்தின் மீதுள்ள மோகம் பற்றி சில சமயம் பேசப்படுகிறது. இப்பொழுதுள்ள நாட்டு நிலைமையில் வாழ்வதே-உயிரை உடலில் ஒட்டி வைப்பதே—பெரும்பாடாக இருக்கிறது! இந்த நிலையில், பொன்னாசை பற்றிப் பெரும்பாலான மக்கள் மனதில் இடமே இல்லை! சாதாரண மக்களில் சிலர் பொன்னுக்கு மதிப்புத் தருவது, 'பொன்னாசையால் அல்ல; ரூபாயின் மதிப்பு சரிந்துபோகப் போக, மதிப்புச் சரியாத ஒன்றில் தங்கள் சிறுசேமிப்புகளை வைக்க அவர்கள் நினைக்கிறார்கள்.

இருபதாண்டுகளுக்கு முன்பு இருந்ததில், ரூபாயின் மதிப்பு ஐந்தில் ஒன்றாக—ஆறில் ஒன்றாக இப்பொழுது குறைந்துவிட்டது.

பணவீக்கம் ஏற்பட்டு, ரூபாய் மதிப்பு குறைகிற வேகத்தில், தங்கத்தின் மதிப்பு அதிகமாகி மக்கள் அதனிடம் மதிப்புக் காட்டுவதில் ஆச்சரியமில்லை!

பணவீக்கம் தடுக்கப்பட்டு, ரூபாய் மதிப்பு நிலை நிறுத்தப்பட்டால், தங்கத்திடம் உள்ள 'மோகம்' தன்னால் குறைந்துவிடும்!

### தங்கத்தையே 'தரம்' குறைத்தீர்--என்னவாயிற்று?

தங்கத்தின் மீது மக்களுக்குள்ள மதிப்பைக் குறைக்கும் முயற்சியில், தங்கத்தின் தரத்தைக் குறைத்து, 14-காரட் தங்கத்தை மொரார்ஜி தேசாய் கொண்டு வந்தார்.

காங்கிரசு ஆட்சியில் எவ்வளவோ துறைகளில், பொருள்களின் தரம் குறைப்பட்டு உள்ளது. இன்று காலை ஒரு உறுப்பினர் கங்கை நதியின் தண்ணீர் அசுத்தப்பட்டுவிட்டதாகக் குறைபட்டுக்கொண்டார்; 'பாவங்களை நீக்கிச் சுத்தப்படுத்துவதாக நம்பப்பட்டுவந்த கங்கை நதியே இப்பொழுது அசுத்தப்பட்டுவிட்டதே' என்று சிலர் வேதனைப்பட்டார்கள்.

அதேபோல், 'தரம்' என்பதற்கு எடுத்துக்காட்டாக உள்ள தங்கத்தையே, 'தரம்' குறைந்த தங்கமாக மாற்றிக் காட்டினீர்கள்—என்னவாயிற்று?

### கதியற்ற மோசடி!

14 காரட் தங்கம் என்பது சில நகை வியாபாரிகளின் கடைகளிலுள்ள கண்ணாடிப் பெட்டிகளை அலங்கரித்துக் கொண்டிருப்பது தவிர, அதற்கு ஆதரவோ மதிப்போ மக்களிடம் உண்டாகவில்லை!

14 காரட் ஒரு கண்கட்டி வித்தையாக—கதியற்ற மோசடியாக ஆகிவிட்டது! அதைத் தொடுவார் யாருமில்லை!

தங்கக் கட்டுப்பாடும், 14 காரட் அளவும் வந்த பின்னும், 22 காரட் நகைகளைச் செய்தபடிதான் இருக்கிறார்கள்—கள்ளத் தங்கம் வந்தபடிதான் இருக்கிறது! கள்ளமார்க்கெட்டுக்காரர்கள் கொள்ளையடித்தபடிதான் இருக்கிறார்கள்!

சட்டத்துக்குக் கட்டுப்பட்டவர்கள் அவதிப்பட—சட்டத்தை மீறுபவர்கள் அதிகமான இலாபம் சம்பாதிக்கிறார்கள்!

### ஏன் இந்தக் கொடுமை?

ஐந்து ஆண்டுகள் தங்கக் கட்டுப்பாட்டுச் சட்டம் இருந்தபொழுது கள்ளக் கடத்தல்காரருக்கும் கறுப்புச் சந்தைக்காரருக்கும், சட்டத்தை மீறுபவருக்கும் இலாபம் இருந்ததே தவிர, மற்ற பலன் என்ன கிடைத்தது?

20 இலட்சம் நகைத் தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டனர்! வேலையில்லாமல், வேதனையில்—பஞ்சத்தில்—பட்டினியில்—தள்ளப்பட்டனர்! 200 பேர்களுக்குமேல் தற்கொலை செய்து கொண்டனர்! ஏன் இந்தக் கொடுமை?

### மொரார்ஜியின் அலட்சியம்!

தங்கக் கட்டுப்பாட்டு மசோதா 1963-ல கொண்டுவாப்பட்ட பொழுது, அதை ஆராய்ந்த பொறுக்குக் குழுவில் நானும் இடம் பெற்றிருந்தேன். 5,000-க்கு மேற்பட்ட மனுக்கள் எங்கள் பரிசீலனைக்கு வந்தன; ஆயிரக்கணக்கான சங்கங்கள் தங்கள் கருத்துக்களை அனுப்பின; நூற்றுக்கணக்கான தீர்மானங்கள் வந்தன; பல திறப்பட்டவர்கள் நேரில் வந்து சாட்சியம் தந்தனர்; ஆனால் இவற்றில் ஒன்றில்கூட—சாட்சியம் தந்தவர்களில் ஒருவர்கூட—தங்கக் கட்டுப்பாட்டுச் சட்டத்தை ஆதரிக்கவில்லை! ஒருமுகமாக எல்லோரும் எதிர்ப்பைத் தெரிவித்தனர்!

அவ்வளவு எதிர்ப்பையும் பொருட்படுத்தாமல், அந்த மசோதாவை மொரார்ஜி நிறைவேற்றினார்—அதன் பலன் என்னவென்று இப்பொழுது நன்கு தெரிந்துவிட்டது!

இலட்சக்கணக்கான நகைத் தொழிலாளர்களையும் அவர்தம் குடும்பத்தினரையும் திண்டாட்டத்தில் விட்டதன்றி, இந்தத் தங்கக் கட்டுப்பாட்டுத் திட்டத்தினால் பலன் எதுவும் கிடைக்கவிலலை!

வீண் பெருமையைப் பார்க்காமல், இந்தத் 'தங்கக் கட்டுப்பாடு' என்ற—தரங்கெட்ட திட்டத்தைக் கைவிடுமாறு அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறேன்."

# தஞ்சை மாவட்ட வடிகால் திட்டம்

## தனி நிபுணர் குழு மூலம் ஆய்வு

சென்னை, மார்ச் 19—

"தஞ்சாவூர் மாவட்டத்துக்கென சிறப்பு வடிகால் திட்டம் உருவாக்கும் பணியை ஒரு தனிக் குழு மேற்கொண்டுள்ளது; இந்தக் குழு 1966-ல் அமைக்கப்பட்டது; ஆனால் அது, தரைக்கு அடியில் உள்ள நீரைப் பயன்படுத்தும் ஆய்வுக் குழுவுடன் இணைந்து பணியாற்றியதால் இந்தப் பணியைக் கவனிக்கவில்லை; 1967-ல்தான் அது தனித்துச் செயல்படத் தொடங்கியது.

"வட கிழக்குப் பருவ மழை பெருமளவில் ஏற்படும்போது தேங்கி நிற்கும் தண்ணீர், பயிருக்கு ஊறு விளைவிக்க நேரிடுவதால் அந்தத் தண்ணீரை வடியச் செய்ய வழிவகை செய்வதே இந்தக் குழு அமைப்பின் நோக்கம்.

"வெண்ணாறு, பாமணியாறு, கொள்ளிடம் ஆகியவற்றின் மூலம் தண்ணீரை கடலில் கலக்கச் செய்வதே திட்டம். இத்திட்டம் ஆராயப்பட்டுவருகிறது; ஆய்வு முடிய இரண்டு ஆண்டுகள் ஆகும்."

இத்தகவல்களை, சட்டமன்றத்தில், பொதுப் பணித் துறை அமைச்சர் திரு. மு. கருணாநிதி தெரிவித்தார்.

# ஒழுங்குபடுத்தப்பட்ட விற்பனைக் கூடங்கள்

## தமிழகத்தில் சிறப்பாக இயங்குகின்றன

சென்னை, மார்ச் 19—

1964-ல் முந்திய அரசு செயல்படுத்திய கொள்முதல் திட்டத்தின் விளைவாகத் தஞ்சை மாவட்டத்தில் 9-ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் மூடப்பட்டன என்றும், இதனால் 45 பேர் வேலை இழந்தார்கள் என்றும், இன்று சட்டமன்றத்தில்,

(4 ம் பக்கம் பார்க்க)

# கரை போட்ட சேலை — வேட்டிகள் கைத்தறிக்கே!

## மத்திய அரசிடம் மீண்டும் வற்புறுத்தப்படும்

### சட்டமன்றத்தில் அமைச்சர் நெடுஞ்செழியன் விளக்கம்

சென்னை, மார்ச் 19—

"கரை போட்ட வேட்டி - சேலைகளைக் கைத்தறிக்கே ஒதுக்க வேண்டும் என்ற கோரிக்கை, கொள்கையளவில் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது; நிதி அமைச்சர் மொரார்ஜி தேசாய் கூட ஒப்புக்கொண்டிருக்கிறார்; மீண்டும் வற்புறுத்தப்படும்"

என்று சட்டமன்றத்தில், தொழில் அமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் கூறினார்.

"ஆலை அல்லது விசைத்தறியில் உற்பத்தியாகும் துணிகளை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்காக மத்திய அரசு கொடுத்துவரும் ஊக்கப் போனசு, கைத்தறித் துணிகளுக்கு நிறுத்தப்பட்டுவிட்டது; அதனை மீண்டும் கொடுக்க வற்புறுத்தப்படும்"

என்றும் அமைச்சர் நெடுஞ்செழியன் சொன்னார்.

"கைத்தறித் துணிக்கு வெளிநாடுகளில் கிராக்கி ஏற்படுத்த அமெரிக்காவிலும், ஐரோப்பிய நாடுகளிலும், பத்திரிகைகள் மூலம் விளம்பரம் செய்யப்படுகின்றன"

என்றும் அமைச்சர், ஒரு கேள்விக்குப் பதிலளிக்கையில் தெரிவித்தார்.

இதுபற்றி மேலும் விளக்கியதாவது :—

"ஆலைத் துணிகளின் விலை ஏற்றப்பட்டது குறித்து இந்த அரசு எதுவும் செய்வதற்கில்லை; அது பற்றி இங்கு பேசப்பட்டு, நமது பரிந்துரையைத்தான் தெரிவிக்கலாம்; விலையைக் குறைக்க வேண்டியது மத்திய அரசின் பொறுப்பாகும்; மெல்ல உயர்ரக ஆலைத் துணிகள்தான் விலை ஏற்றப்பட்டிருக்கிறது; இந்த விலையேற்றம் மூலம் கைத்தறிக்கும் — ஆலைகளுக்கும் விலைப் போட்டி ஏற்பட்டு, கைத்தறித் துணி ஓரளவு அதிகமாக விற்கவும் வாய்ப்பு ஏற்படலாம்.

"தமிழகத்தில் இப்போது உற்பத்தியாகும் கைத்தறித் துணி முழுவதையும் இங்கேயே பயன்படுத்தினாலகூட, அது தமிழக மக்கள் தொகையில் மூன்றில் ஒரு பங்கினரின் தேவையைத்தான் நிறைவு செய்யும்; எஞ்சியுள்ள மூன்றில் இரண்டு பங்கினர், ஆலைத் துணியைத்தான் நாட வேண்டும்; எனவே இங்குள்ள அனைவருமே கைத்தறித் துணிதான் உடுத்துவது என்று முடிவு செய்தால், கைத்தறித் துணித் தேக்கமும் ஏற்படாது—வெளிநாட்டிலும் சந்தை தேட வேண்டியதில்லை."

# குடிசைப் பகுதிகளில் ஒழுக்கக் கண்காணிப்புக் குழு

## எல்லா அரசியல் கட்சிகளுக்கும் இடமளிக்கப்படுகிறது

### எதிர்க் கட்சியினரின் புகாருக்கு முதலமைச்சர் அண்ணா பதில்

சென்னை, மார்ச் 19—

"சென்னை நகரில் உள்ள குடிசைப் பகுதிகளில் ஒழுக்கக் கண்காணிப்புக் குழுக்கள் அமைக்கப்படுவது உண்மை; எல்லா அரசியல் கட்சிகளையும் சேர்ந்த தகுதியும் செல்வாக்கும் மிக்கவர்கள் இக்குழுக்களில் உறுப்பினர்களாக நியமிக்கப்படுகின்றனர்; குற்றம் நிகழாமல் பார்த்துக் கொள்வதும், குற்றங்களைத் தடுப்பதில் காவல்துறையினருடன் ஒத்துழைப்பதும், தீயபழக்கங் கொண்டோரை நல்வழிப்படுத்தித் திருத்துவதும் இந்தச் சீர்திருத்தக் குழுவின் செயல் முறைகளாகும்"

என்று முதலமைச்சர் அண்ணா அவர்கள், இன்று சட்டமன்றத்தில் கே. விநயகத்தின் கேள்விக்குப் பதிலளிக்கையில் கூறினார்.

"இந்த உறுப்பினர்களை அந்தந்தப் பகுதிப் போலீசு அதிகாரிகளே தேர்ந்தெடுத்து நியமிக்கிறார்கள்; எல்லாக் கட்சியினருக்கும் குழுவில் இடமளிக்கப்படுகிறது"

என்றும் கூறிய அண்ணா அவர்கள், இதற்கு எடுத்துக்காட்டாக சேத்துப்பட்டுப் பகுதியில் ஜநனாதபுரம்—மங்களாபுரம் — மீனாம்பாள் சிவராசபுரம் — பிருந்தாவனம் ஆகிய நான்கு இடங்களிலும் அமைக்கப்பட்டுள்ள குழுக்களைச் சுட்டிக்காட்டினார்; கழகத்திற்கும் —காங்கிரசுக் கட்சிக்கும் சம இடங்கள் அளிக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவித்தார்.

"அரசியல் கட்சியைச் சாராதவர்களைக் கொண்டே இந்தக் குழுவை அமைப்பது இயலக்கூடியது அல்ல; அப்படிப்பட்டவர்கள் இதில் அங்கம் வகிக்க முன்வரமாட்டார்கள்: அவர்களால் சில காரியங்களில் ஈடுபட முடியாது; அரசியல் கட்சிக்காரர்கள் இதில் ஈடுபடுவது தவறாகாது; ஒரு கட்சிக்கு மட்டுமே இடமளிப்பதாகக் கூறப்படுவது சரியல்ல; எல்லாக் கட்சிக்காரர்களுக்கும் இடமளிக்கப்படுகிறது"

என்றும் முதலமைச்சர் அண்ணா அவர்கள் மேலும் விளக்கினார்.

கேள்வி:— "குடிசைப் பகுதிகளுக்கு மட்டும் இந்த ஒழுக்கக் கண்காணிப்புக் குழு அமைக்கப்பட்டிருப்பது ஏன்? குடிசைவாசிகள்தான் ஒழுக்கந் தவறுகிறார்களா?"

பதில்:—"சொன்னால் கேட்கக் கூடியவர்கள் அந்தப் பகுதிகளில் அதிகமாக இருக்கிறார்கள் என்பதால்தான் அங்கு அமைக்கப்படுகிறது."

கேள்வி:—"வசதி படைத்தவர்கள்தான் ஒழுக்கக் கேடான காரியங்களில் ஈடுபடுகிறார்கள் என்பது அரசுக்குத் தெரியுமா?"

பதில்:—"வசதி படைத்தவர்கள்—வசதியற்றவர்கள் ஆகிய இரு சாராரிடையேயும் சிலரிடம் ஒழுக்கக் கேடுகள் நிலவுகின்றன. இந்தக் குழு அதற்காக மட்டுமல்ல; அமைதியை நிலைநாட்டுவதிலும், தீய சக்திகளை ஒடுக்குவதிலும் போலீசார் மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்குத் துணையாக நிற்பது இந்தக் குழு."

கருத்திருமன்:—"இந்தக் குழுக்களை வெளியூர்களிலும் ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுமா?"

அண்ணா:— "வெளியூர்களிலும் இப்படிப்பட்ட குழுக்களை அமைக்க வேண்டும் என்ற கோரிக்கையை நான் ஆதரிக்கிறேன்."

# தமிழ் மருத்துவத்துக்கு மறுமலர்ச்சி

## தமிழகத்தில் நல்லாட்சி மலர்ந்ததன் பயன்

### சித்த மருத்துவ நூல் வெளியீட்டு விழாவில் கி. ஆ. பெ. விசுவநாதம் பெருமிதம்

சென்னை, மார்ச் 8—

"தமிழ்நாட்டில் நல்லரசு ஏற்பட்டுள்ளதன் பலனாக இப்போது தமிழ் மருத்துவத்துக்கு மறுமலர்ச்சி ஏற்பட்டுள்ளது. உலகத் தமிழ் மாநாட்டில் சித்த வைத்திய ஆராய்ச்சிக்கு இடம் அளித்தனர்; அதன் மூலம், சித்த (தமிழ்) மருத்துவத்துக்கு மீண்டும் நல்ல காலம் பிறந்தது. இனிக் கவலை இல்லை—தமிழும், தமிழ் மருத்துவமும் சிறப்பாக வளரும்"

என்று முத்தமிழ்க் காவலர் திரு. கி. ஆ. பெ. விசுவநாதம் கூறினர்.

சென்னை ஒய். எம். சி. ஏ. பட்டிமன்றத்தில் சித்த மகுட வெளியீட்டகத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த 'அகால மரண நூல்' என்னும் சித்த மருத்துவ நூல் வெளியீட்டு விழாவில் திரு. கி. ஆ. பெ. விசுவநாதம் கலந்துகொண்டு வாழ்த்துரை வழங்குகையில், 'உலகில் மற்ற எல்லா மருத்துவ முறைகளிலும் சிறந்தது தமிழ் மருத்துவம்' என்று விளக்கமளித்தார்.

திரு. சிதம்பர தாணுப் பிள்ளையால் தொகுக்கப்பட்ட இந்த நூலை மாநிலத் தலைமை மாஜிஸ்திரேட் திரு. வி. பலராமையா வெளியிட்டு தமிழ் மருத்துவத்தின் தனிச் சிறப்பையும், அதன் பயனையும் விளக்கினர்.

திரு. சிதம்பர தாணுப்பிள்ளை, தமது நன்றியுரையில், தமது குடும்பத்தில் தம் மூதாதையரால் சேகரித்து வைக்கப்பட்டுள்ள நூற்றுக்கணக்கான ஏட்டுச் சுவடிகளில் ஒன்றுதான் இந்த நூல் என்றும், இன்னும் பல ஏட்டுச் சுவடிகளை அச்சியற்றும் முயற்சியில் தாம் ஈடுபட்டிருப்பதாகவும் கூறினர்.

திரு. கே. பக்தவத்சலம் அனைவரையும் வரவேற்றுப் பேசினர். திரு. அன்புப் பழநீ நன்றி கூறினர்.

திரு. கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்கள் தொடர்ந்து பேசுகையில், தமிழக அரசின் தலைமைச் செயலகத்தில் திறக்கப்பட்டுள்ள தமிழ் மருத்துவமனையில் நாள் தோறும் ஏராளமானவர்கள் சிகிச்சை பெறுவதாகவும், மேனாட்டு மருத்துவ முறைகளால் தீராத நீண்டநாள் நோய்களையெல்லாம் இந்த மருத்துவமனை மூலம் பலர் தீர்த்துக்கொண்டிருப்பதாகவும் கூறினர்.

"சித்த மருத்துவம், காலத்தால் தொன்மையானது; பயனால் சிறந்தது; செலவில் குறைந்தது; பயன்படுத்தும் முறை மிக எளிமையானது"

என்பதைப் பல சான்றுகளுடன் விளக்கினர்.

தமிழ்நாட்டின் தட்பவெப்ப நிலைக்குத் தமிழ் மருத்துவமே பொருந்தக்கூடியது என்பதையும், மேனாட்டு மருத்துவ முறைகள் இந்த நாட்டுக்கு ஏற்றவையல்ல என்பதுடன் செலவிலும் கூடியது என்றும், இந்த நாட்டில் கிடைக்கக் கூடிய மிக மலிவாகக் கிடைக்கக் கூடிய மூலிகைகளை நாம் பயன்படுத்தாததால் அதே மூலிகைகளைக்கொண்டு மேனாட்டு முறையில் மருந்து செய்த் தயாரித்து இங்கு அதிக விலைக்கு விற்கிறார்கள் என்றும் அவர் கூறினர்.

தமிழ்நாட்டில் இருந்த அரசர்களையும் அரசாட்சியையும் பொறுத்தே மருத்துவ முறைகளும் மாறிவிட்டன என்று கூறிய அவர் பின்வருமாறு விளக்கினர்:—

"பண்டைத் தமிழ் மன்னர்கள், சித்த மருத்துவத்தையே ஆதரித்தனர். பின்னர், நாயக்க வம்சத்தினர் இங்கு ஆண்டதால், அவர்கள் ஆதரித்த ஆயுர்வேத முறையில் மக்களும் நம்பிக்கை வைத்தனர். அதன்பின், நவாபுகள் ஆட்சி ஏற்பட்டபோது யூனானி வைத்திய முறை புகுத்தப்பட்டது. அடுத்து ஆங்கிலேயர் ஆட்சியில் அலோபதி முறை இங்கு புகுத்தப்பட்டது.

"இவ்வளவுக்குப் பிறகும் தமிழைப் போலவே, தமிழ் மருத்துவமும் அழியாது நிலைத்து நின்று வந்திருக்கிறது. தமிழ் மருத்துவத்தை யாரும் அழிக்க முடியவில்லை. தங்கள் மருத்துவ முறையைத்தான் புகுத்தினர்களே தவிர தமிழ் மருத்துவத்தை அழிக்க அவர்களால் இயலவில்லை.

"இப்போது தமிழ்நாட்டில் தமிழர் ஆட்சி ஏற்பட்டுள்ளதால் மீண்டும் தமிழ் மருத்துவத்துக்கு வாழ்வளிக்க முன்வந்துள்ளனர். இனித் தமிழும், தமிழ் மருத்துவமும் சிறந்து விளங்கும் என்பதில் எனக்கு ஐயமில்லை."

## உம்பளச்சேரியில் கழகப் பொதுக்கூட்டம்

உம்பளச்சேரி தி.மு.க. சார்பில் 12—3—68 மாலை 6-30 மணி அளவில் தோழர் பால சுப்பிரமணியன் தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. மணக்குடி இராவணன், வே. கோதண்டபாணி, தோப்புத்துறை செ. யூசப், வைரக்கண்ணு, அன்பரசு, ப. முருகு, மா. மீனாட்சி சுந்தரம், இரா. சங்கரன், ஆகியோர் பேசினர்.

இறுதியில் அமைப்புச் செயலாளர் திரு. என். வி. நடராசன் எம்.எல்.சி. அவர்கள், தமிழக அரசின் ஓராண்டு சாதனைகளைக் குறித்து தெளிவுபட விளக்கினார்கள்.

கி. ஆர். சுப்பிரமணியன் வரவேற்புரை நிகழ்த்தினர்.

# செய்யாறு உயர்நிலைப் பள்ளி பொன் விழா

### ஓர் வேண்டுகோள்

"வட ஆற்காடு மாவட்டத்தில் உள்ள செய்யாறு அரசினர் (போர்டு) ஆண்கள் உயர்நிலைப் பள்ளியின் 'பொன் விழா' ஆண்டை விரைவில் சீரிய முறையில் நடத்த இருக்கிறோம்.

"விழாவின் நினைவாகப் பள்ளிக்கு இரண்டு இலட்சம் ரூபாய் மதிப்பில் ஒரு பெரிய மண்டபம் கட்டித் தரப் (பொன் விழாவுக்கென சட்டமன்ற துணைத் தலைவர் புலவர் திரு. கா. கோவிந்தனார் எம்.ஏ. தலைமையில் ஏற்பட்டுள்ள) பொன் விழாக் குழு முடிவு எடுத்து, பணிகள் நடைபெற்று வருகின்றன.

"அதோடு, பள்ளியில் பயின்று சென்ற பழைய மாணவர்களின் முகவரிகளை எல்லாம் திரட்டி ஒரு புத்தகம் வெளியிடவும் முடிவு செய்யப்பட்டு இருக்கிறது.

"இப்பள்ளியில் படித்து வெளியிடங்களில் பணிபுரியும் எல்லாப் பழைய மாணவர்களும், எல்லா உள்ளூர்—வெளியூர் பழைய மாணவர்களும் எங்களுடன் தொடர்புகொண்டு, தங்கள் சரியான முகவரிகளையும், தங்களுக்குத் தெரிந்த தங்கள் நண்பர்களின் சரியான முகவரிகளையும் தெரிவித்து, இந்த மாபெரும் பணியில் ஒத்துழைப்பு நல்குமாறு பணிவுடன் வேண்டிக்கொள்கிறோம்; விரிவான செய்திகள் பின்னர் அறிவிக்கப்படும்"

என்று, விழாக் குழுச் செயலாளர் மா. நா. இராசமாணிக்கம் அறிவிக்கிறார்.

தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:—செயலாளர், பொன் விழாக் குழு, 23-பி. காந்தி சாலை, திருவத்திபுரம்.


குடும்பக் கட்டுப்பாடு

## லூப் முறையின் அனுகூலம்

1. லிப்பியின் 'லூப்', கர்ப்பத் தடை செய்யவும் குழந்தைகளுக்கு இடையே போதிய இடைவெளி ஏற்படுத்தவும் உபயோகப்படுகிறது.
2. மணமான பெண்களுக்கு—குடும்பக் கட்டுப்பாட்டுக்கு 'லூப்' பொருத்தலாம்.
3. 'லூப்' பொருத்துவதற்கு முன்னர், எத்தனைக் குழந்தைகள் பிறந்திருந்தாலும் பரவாயில்லை; அதனால் 'லூப்' பொருத்துவதில் தடை எதுவும் இல்லை.
4. 'லூப்' சரியானபடி பொருத்தப்பட்டால், கணவனுக்கும் சரி—மனைவிக்கும் சரி—அது இருப்பதே தெரியாது.
5. டாக்டரால் ஒரு தடவை 'லூப்' பொருத்தப்பட்டால் போதும்; மற்ற முறைகளைப்போல் மீண்டும் கருத்தடைச் சாதனங்களைத்தேடிப் பெற வேண்டிய அவசியம் இதில் இல்லை.
6. அறுவைச் சிகிச்சைபோல் 'லூப்' மாற்ற முடியாத கருத்தடை முறை அல்ல; தேவையானபோது இதை நீக்கிவிடலாம். பின்னர் மீண்டும் கருத் தரிக்கலாம்; இதனால் இந்த முறையைக் கையாள கணவர்—மனைவியின் எழுத்து மூலமான சம்மதம் தேவையில்லை.
7. மீண்டும் குழந்தை பெற விரும்பினால், டாக்டரிடம் போய் 'லூப்'பை எடுத்துவிடலாம். பின்னர் ஒரு மாதத்திற்குள் மீண்டும் கருத் தரிக்கலாம். அதனால், கர்ப்பம் தரிப்பதற்கோ பிறக்கும் குழந்தைக்கோ எந்தவிதக் கெடுதலும் இல்லை.
8. 'லூப்' செலவில்லாத ஒன்று; இந்த நாட்டில் உள்ள ஒவ்வொரு பெண்ணுக்கும் இது இலவசமாகக் கிடைக்கும்.
9. நோய் நொடி இருப்பதாகக் கண்டுபிடிக்கவும், இருந்தால் அவற்றுக்குச் சிகிச்சை அளிக்கவுமான வாய்ப்பு. 'லூப்' பொருத்த வரும் ஒவ்வொரு பெண்ணுக்கும் கிடைக்கிறது. பெண் உறுப்பில் உள்ள கோளாறுகள், புற்று நோய்—காச நோய் போன்றவற்றைக் கண்டுபிடிக்கவும், சிகிச்சை அளிக்கவும் வாய்ப்பு ஏற்படுகிறது.
10. இன்று நமக்குத் தெரிந்துள்ள முறைகளில், 'லூப்' சிறந்தது என்று இதுவரை வெளியான ஆராய்ச்சிமுடிவுகள் கூறுகின்றன.

வேறு விவரம் தேவையானால், கீழ்க்கண்ட இடங்களில் பெறலாம்:—

1. துணை நெறியாளர், குடும்பக் கட்டுப்பாடு, சென்னை-6
2. பெண்கள்-குழந்தைகள் ஆஸ்பத்திரி, எழும்பூர், சென்னை-8
3. அரசினர் கஸ்தூர்பா காந்தி மருத்துவமனை, திருவல்லிக்கேணி, சென்னை-5
4. கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி, சென்னை-10

மாநிலக் குடும்பக் கட்டுப்பாடு மற்றும் பொதுச் சுகாதார இயக்குநர், சென்னை-6



## 'காண்டோம்'

அடிக்கடி கருத் தரிப்பது ஆரோக்கியத்தைக் கெடுக்கும். கருத் தரிப்பதைத் தள்ளிப் போடுவது எப்படி?

'காண்டோம்' (ரப்பர் கருவி) உபயோகிப்பது மூலம் கருத் தரிப்பதைத் தடுக்கலாம்.

நீண்ட காலம் 'காண்டோம்' உபயோகப்படுத்துவதுகூட எந்தவிதமான கெடுதலும் விளைப்பது இல்லை. தாம்பத்திய சுகத்தில் அது பெரும் அளவில் தலையிடுவதும் இல்லை.

'காண்டோம்' கீழ்க்கண்ட இடங்களில் இலவசமாகக் கிடைக்கும்:—

எல்லா அரசினர் ஆஸ்பத்திரிகள்

பிரைமரி ஹெல்த் சென்டர்கள்

மகப்பேறு மற்றும் குழந்தைகள் மருத்துவமனைகள்

விவரங்களுக்கு உங்கள் டாக்டரிடம் ஆலோசனை செய்யுங்கள்.

மாநிலக் குடும்பக் கட்டுப்பாடு மற்றும் பொதுச் சுகாதார இயக்குநர், சென்னை-6



## 'டூபக்டமி'

(பெண்களுக்கான கருத்தடை ஆபரேஷன்)

'டூபக்டமி' மூலம் குடும்பத்தைக் கட்டுப்படுத்துங்கள்.

பெண்களுக்குச் சிறந்த குடும்பக் கட்டுப்பாட்டு முறை.

'டூபக்டமி'—சாதாரணமாக, பிரசவத்திற்குப் பின்னர் மூன்றாவது நாள் செய்யப்படுகிறது.

இதைச் செய்துகொள்ளும் பெண் 24 வயது உடையவளாகவும் மூன்று குழந்தைகளுக்குத் தாயாகவும் இருக்கவேண்டும்.

கணவன்—மனைவி இருவரும் உறுதிமொழிப் பத்திரத்தில் கையெழுத்திட்ட பின்னரே இந்த ஆபரேஷன் செய்யப்படும்.

எல்லா சர்க்கார் ஆஸ்பத்திரிகளிலும் இது இலவசமாகச் செய்யப்படும்.

ஆபரேஷன் செய்து கொள்ளும் தாய்மார்களுக்கு ஒவ்வொருவருக்கும் ரூ. 30 அலவன்ஸ் தரப்படும்.

இந்த ஆபரேஷன் ஆரோக்கியத்தைப் பாதிக்காது; அன்றாட வேலைக்குத் தடையாக இராது.

இது, ஆண்—பெண் உறவுக்குக் குந்தகமாக இராது; அதனால், கிடைக்கும் இன்பத்தைப் பாதிக்காது.

இந்த ஆபரேஷன் செய்துகொள்ள அருகாமையில் உள்ள சர்க்கார் பெண்கள் ஆஸ்பத்திரியில் பதிவு செய்து கொள்ளுங்கள்.

சிறிய குடும்பமே மகிழ்ச்சிகரமான குடும்பம்.

உங்கள் வாழ்வு முழுமையும் மகிழ்வு பெற குடும்பத்தை அளவோடு வைத்துக் கொள்ளுங்கள்.

மாநிலக் குடும்பக் கட்டுப்பாடு மற்றும் பொதுச் சுகாதார இயக்குநர், சென்னை-6.



ரோஜா பாக்கு & புகையிலை


N. V. K. M. & சன்ஸ், திண்டுக்கல்



# ஸன்காஸ்ட்

சிறந்த மோட்டார் உறுப்புகள்

கிளட்ச் ஹவுஸிங், பிரேக் ட்ரம்ஸ், கிங்பின்ஸ்



உறுதியும் உழைப்பும் மிக்க மோட்டார் உறுப்புகளின் தேவை நாளுக்கு நாள் அதிகரிக்கிறது. அதனை பூர்த்திசெய்ய, சுந்தரம்ஸ் பிரைவேட் லிமிடெட் ஸ்தாபனத்தார் மதுரையில் உள்ள தங்கள் நவீன தொழிற்சாலையில் ஸன்காஸ்ட் கிளட்ச் ஹவுஸிங்ஸ், பிரேக் ட்ரம்ஸ், கிங் பின்ஸ் முதலியவற்றைத் தயாரிக்கின்றனர்.

மிக உயர்ந்த சாமான்களைக் கொண்டு, மோட்டார்த் துறையில் பல்லாண்டுகள் அனுபவமுள்ள தொழிலாளர்கள், திறமையான மேற்பார்வையாளர்களின் கீழ் ஸன்காஸ்ட் மோட்டார் உறுப்புகளைத் தயாரிக்கின்றனர்.

சுந்தரம்ஸ் பிரைவேட் லிமிடெட்
B. ரூப்பர் 1 & 2 இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், மதுரை 7
(ஒரு டிவிஎஸ் ஸ்தாபனம்)

tvs-s-4392

# 'தொழிலாளர்களின் உரிமைகளைத் தடுக்க மாட்டோம்'

## 'வேலை நிறுத்தம் விபரீதம் விளைவித்தால் விடமாட்டோம்'

### தி. மு. கழக அரசின் நிதானமான கொள்கை — சட்டமன்றத்தில் அண்ணா விளக்கம்

சென்னை, மார்ச் 20—

"வேலைநிறுத்தம் என்பது, தொழிலாளர்களுக்கான உரிமைகளில் மிகவும் முக்கியமான உரிமை; அது பலாத்காரமற்ற முறையில்—அமைதி குலையாத வகையில் நடத்தப்படுவதை இந்த அரசு தடுக்காது; ஆனால், வேலைநிறுத்தத்தில் தொடங்கி சட்டத்தைப் பாதிக்கும் வகையில் போகுமானால் அரசு விட்டுவைக்காது!

"தொழிலாளர்கள், தொழில் அதிபர்கள் இரு சாராருக்கும் நீதியாக அமையும் 'நிதானமான தொழிலாளர் நலக் கொள்கை'யை இந்த அரசு பின்பற்றும்"

என்று, முதலமைச்சர் அண்ணா அவர்கள் இன்று சட்டமன்றத்தில் அறிவித்தார். தொழிலாளர் நலத்துறை மானியக் கோரிக்கைமீது நடைபெற்ற விவாதத்தில் குறுக்கிட்டுப் பேசுகையில் மேலும் அவர் கூறியதாவது:—

"தொழில் மந்தம் ஏற்பட்டிருக்கின்ற காலம் இது; இந்த நேரத்தில் தொழில் அமைதி இருந்தாலன்றி தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்புத் தேடிக் கொடுக்கும் பணியில் நாம் மிகவும் சிரமப்பட வேண்டியிருக்கும்.

தொழிலாளருக்கு நலன் கிடைக்க வேண்டுமானால் தொழில் நடக்க வேண்டும். அவர்களுடைய கோரிக்கைகள், கிளர்ச்சிகள் எல்லாம் தொழிலைப் பாதிக்காதபடி இருக்கவேண்டும்.

பத்து இருபது ஆண்டுகளுக்கு முன்னால் வேலை நிறுத்தங்கள் நடந்ததைப் பார்த்திருக்கிறேன்; இப்பொழுது நடப்பதையும் பார்த்திருக்கிறேன்; இரண்டுக்கும் உள்ள வேறுபாடுகளைத் தொழிலாளர் தலைவர்கள் மிகவும் நன்றாக உணருவார்கள்.

முன்பு வேலை நிறுத்தம் நடைபெற்றால், தொழிற்சாலைப் பிரதேசம் சூன்யமாக இருக்கும்; அதைக் கண்டு முதலாளிகள், தங்கள் இலாபம் குறைகிறதே என்று படிப்படியாகப் பேச்சு நடத்த வருவார்கள்.

ஆனால் இன்றையத்தினம், வேலை நிறுத்தங்கள் என்றால் உடனடியாகக் கிளர்ச்சியிலும், வன்செயலிலும், பேசத்தகாத, யாரும் சகிக்கத்தகாத தூற்றல் மொழி பேசுவதிலும், சென்று கொண்டிருக்கின்றன.

இதற்குத் 'தொழிலாளர் தலைவர்கள்தான் பொறுப்பு' என்று நான் சொல்லவில்லை.

அரசியல் கட்சிகளில் கட்சி எடுத்த முடிவுக்கு மாறாக உறுப்பினர்கள் வரம்பு மீறி நடந்தால் அவர்கள்மீது நடவடிக்கை எடுப்பதுபோல், தொழிற்சங்கத்தைச் சேர்ந்த யாராவது வன்செயலில் ஈடுபட்டால் அவர்களைச் சங்கத்திலிருந்து நீக்கி வைத்தால் நிலைமை போற்றக் கூடியதாக இருக்கும்.

'கிளர்ச்சி நடத்தாமல் தொழிலாளர்கள் தங்கள் கோரிக்கைகளைப் பெறமுடியாது' என்று இங்கு பேசியவர்களில் ஒருவர் குறிப்பிட்டார்.

கிளர்ச்சிகள் நடத்துவதுதான் தொழிற்சங்கத்திற்குரிய இலக்கணமாக அவர்களுக்கு இருக்கலாம்; அந்தக் கிளர்ச்சிகள் வன்செயலில் கொண்டுபோய் விடுமானால், அதை அடக்குவதுதான் அரசாங்கத்தின் இலக்கணமாக இருக்கும் என்பதை மறந்துவிடக் கூடாது.

வன்செயல்கள் நடைபெறுவதற்கு முன்பே அரசு நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும் என்பதுதான் என் கருத்து. இதற்காகவே இடதுசாரித் தலைவர்களில் ஒருவரை பதினைந்து நாட்களுக்கு ஒரு முறை என்னைச் சந்தித்து, 'இன்ன இடத்தில் தகராறுகள் நடக்கலாம்' என்று முன்கூட்டியே சொல்லும்படி கூறினேன்; அதற்கென நியமிக்கப்பட்டவர் இப்பொழுது டில்லி செல்கிறார். அவருக்குப் பதிலாக வேறொருவரை அந்த இடத்திற்கு நியமிக்க வேண்டும்.

இதுபோலவே, முதலாளிகளின் பிரதிநிதி ஒருவர், இரண்டு மூன்று வாரங்களுக்கு ஒருமுறை வந்து, 'இன்ன தொழிற்சாலையில் இன்ன தகராறு வரும் போல் இருக்கிறது' என்று சொல்கிறார்; அதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

## துப்பாக்கிச் சூட்டால் மாண்டவர் குடும்பத்துக்கு இழப்பீடு

### சுடுவதைத் தவிர்க்க எல்லா முயற்சிகளும் செய்யப்படும்

சென்னை, மார்ச் 19—

"தொழிலாளர் போராட்டத்தின் போது துப்பாக்கிச் சூடு நடந்ததை நான் வேதனையோடு கவனித்தேன்.

"துப்பாக்கிச் சூடு நடைபெறாமல் தடுக்க எல்லாவிதமான முயற்சிகளையும் நான் இன்றும் எடுத்துக் கொள்வேன்.

"'போலீசை வைத்துக்கொண்டு சும்மா இருக்கிறாயே' என்று சில காங்கிரசுக்காரர்கள் பேசுகிறார்கள்.

"இருபது ஆண்டுகளாக ஆட்சியை நடத்தியவர்கள், 'போலீசார் கையைக் கட்டிக்கொண்டு இருப்பதா' என்று கேட்பது, 'மறைமுகமான தூண்டுதல்' என்பதை ஒப்புக்கொள்ளவேண்டும்; 'அதனால்தான் துப்பாக்கிச் சூடு நடந்தது' என நான் சொல்லவில்லை!

"துப்பாக்கிச் சூட்டினால் உயிர்நீத்தவர்களின் குடும்பத்தினருக்கு இழப்பு ஈடு தருவதாக நான் முடிவு செய்திருக்கிறேன். எந்த அளவு தருவது—எந்த முறையில் தருவது என்பது பற்றி விவரங்கள் சேகரிக்கப்படுகின்றன."

--முதலமைச்சர் அண்ணா
(சட்டமன்றத்தில்)

## மாநில அரசுக்கு மட்டும் உரியதல்ல பிரச்சினை!

### எதிர்க் கட்சிக் குற்றச்சாட்டுக்கு அண்ணா பதில்

சென்னை, மார்ச் 19—

"'நெல் கொள்முதல் விலையை உயர்த்திக் கொடுத்தால், விவசாயிகளுக்குக் கூலியை உயர்த்தித் தருவோம்' என்று எதிர்க் கட்சித் தலைவர் கூறினார்.

"பொருளாதாரத் தத்துவத்தைக் கொஞ்சம் ஆராய்ந்து பார்க்க வேண்டும். ஒரு பக்கம் கூலியை அதிகமாகக் கொடுத்துவிட்டு, விவசாயி வாங்கும் உணவுப் பண்டங்களுக்கும் நெல்லுக்கும் அதிக விலை ஏற்றுவிப்பது என்பது, 'பாரி பறித்த பரிசில் என்பார்களே, அதுபோல்—கொடுத்ததைத் திரும்பப் பறித்துக்கொண்டதுபோல் ஆகும். இது, நிரந்தரப் பரிகாரமாக இருக்காது!

"ஒரு வண்டி நெல் ரூ. 25—30-க்கு விற்றபோது விவசாயிகளுக்கு எவ்வளவு கூலி தரப்பட்டுவந்தது — படிப்படியாக நெல்லின் விலை உயர்ந்த பிறகு கூலி எவ்வளவு உயர்ந்திருக்கிறது—முன்பு அவர்களின் வாழ்க்கைத்தரம் எப்படி இருந்தது—இப்போது எப்படி இருக்கிறது என்பதையெல்லாம் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

"15 ஆண்டுகளுக்கு முன் 8 அணா கூலி பெற்றிருந்தவர்கள், இன்று ரூ. 3 பெறும்போது அந்த அளவுக்கு வாழ்க்கை நடத்த முடியாமல் இருப்பதையும் எண்ணிப்பார்க்க வேண்டும்.

"ஆகவே, கூலியை உயர்த்துவதாலோ, நெல் விலையை உயர்த்துவதாலோ பிரச்சினைகள் தீர்ந்துவிடாது! இப்பிரச்சினைகள், மாநில அரசு தீர்க்கும் அளவுக்கு இல்லை—மாநில அரசுக்கு மட்டும் உட்பட்டது அல்ல!"

(சட்டமன்றத்தில் தொழிற் சங்க மானியத்தின்மீது நடைபெற்ற விவாதத்திற்கு விளக்கமளிக்கையில்)

## நடக்க இருப்பவை

### 21--3--68

**தாமரைப்புலம்**

தி.மு.க. சார்பில் மாலை 6-30 மணிக்கு தோப்படிக்குளம் அருகில்; தலைவர்: சி. அருணாசலம்; பேசுவோர்: சி. தமிழரசி பி.ஏ., சேரன் பி.ஏ., மா. மீனாட்சிசுந்தரம், ப. முருகு பி.ஏ., இரா. சங்கரன், சிவ. கனகசுந்தரம், செ. யூசுப், மு. க. அன்பரசு, வே. கோதண்டபாணி, கோ. வைரக்கண்ணு, சா. குமரவேல்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி., அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு, அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை-13.) அச்சிட்டு வெளியிடப்படுகிறது.

## உங்கள் குடும்பத்தைத் திட்டமிட்டுக் கொள்ளுங்கள்

1. 'வாசெக்டமி' எனப்படும் ஆண்களுக்கான அறுவை முறையே குடும்பக் கட்டுப்பாட்டிற்கு மெத்தவும் உகந்தது; ஏனெனில், அறுவை முறைதான் மிகவும் எளிதானது— பாதுகாப்பானதும் கூட.
2. 'வாசெக்டமி' அறுவை முறைதான் நிலையானது; குறைந்தது மூன்று குழந்தைகளையுடைய தந்தைமார் மட்டுமே 'வாசெக்டமி' மூலம் குடும்பக் கட்டுப்பாடு செய்துகொள்ள அணுக வேண்டும்.
3. 'வாசெக்டமி' அறுவை மூலம் குடும்பக் கட்டுப்பாடு செய்துகொள்ள விரும்பும் குடும்பத்தின் கணவனும் மனைவியும், தாங்கள் இம்முறைக்கு முழு மனத்தோடு ஒப்புக்கொள்வதோடு. இதன் மூலம் தங்களுக்கு இனிமேல் மேற்கொண்டு குழந்தைப் பேறு கிட்டிடும் வாய்ப்பு அறவே அற்றுப்போகிறது என்பதையும் திட்டவட்டமாக உணர்ந்து கொண்டிருப்பதாகவும், எழுத்து மூலம் ஒப்புதல் தெரிவித்து, அதற்கென நிர்ணயிக்கப்பட்டுள்ள உடன்பாட்டுப் பத்திரத்தில் தாமாகவே விரும்பி இருவரும் கையெழுத்திட வேண்டும். கணவன்—மனைவி ஆகிய இருவரது எழுத்து மூலமான ஒப்புதலளிப்புக்குப் பின்னர்தான், அக்குடும்பத்தின் தந்தைக்கு 'வாசெக்டமி' எனும் அறுவை செய்யப்படும்.
4. இக்குடும்பக் கட்டுப்பாட்டுக்கான 'வாசெக்டமி' அறுவை முறை மிகவும் எளிதானது—மிகச் சில நிமிடங்களுக்குள்ளாகவே செய்து முடிக்கப்பட்டு விடுகிறது.
5. அறுவைச் சிகிச்சை செய்து கொண்ட தந்தையர், மருத்துவ மனையிலே தங்கி மேலும் சிகிச்சை பெற்றுக் கொள்ளவேண்டிய அவசியமே கிடையாது. அறுவைச் சிகிச்சை முடிந்ததும் வீட்டிற்குத் திரும்பி, வீட்டிலேயே ஓய்வு எடுத்துக் கொள்ளலாம்.
6. அறுவைச் சிகிச்சையின்போது போடப்பட்ட தையல்கள் அனைத்தும் ஐந்தாம் நாளன்றே பிரிக்கப்பட்டு விடுகிறது. அதுமுதல், 'வாசெக்டமி' செய்துகொண்ட தந்தையர், வேலைக்குத் திரும்பி வழக்கம்போல் தமது அன்றாட அலுவல்களில் ஈடுபடலாம்.
7. சிகிச்சைக்குள்ளான தந்தையர் அனைவரும் குறைந்தது இரண்டு மாத காலத்திற்கு சைக்கிள் ஓட்டக்கூடாது.
8. 'வாசெக்டமி' அறுவை செய்து எட்டு வார காலம் கடந்த பிறகுதான் ஆண் விந்துவிலுள்ள கருவுண்டாக்கும் வீரியச் சத்து அடியோடு அற்றுப்போகும். இந்த எட்டு வார கால இடைவெளியில் உடலுறவு கொண்டால் சம்பந்தப்பட்ட தாய்மார் கருத்தரிக்கக் கூடும். எனவே, இந்த இடைக் காலத்தில் உடலுறவு கொள்ள விரும்பினால், 'காண்டோம்' ரப்பர் கருவியையோ அல்லது வேறு உறுதியான கருத்தடைச் சாதனங்களையோ மறவாமல் கையாள வேண்டியது அவசியமாகும்.
9. இந்த அறுவைச் சிகிச்சையால் தந்தையின் உடல்நலம் எந்த விதத்திலும் பாதிக்கப்படுவதே இல்லை. உடலுக்கு ஊறு தரும் கெடுதலான விளைவுகள் எவையும் ஏற்படுவதில்லை.
10. 'வாசெக்டமி'க்கு உட்பட்ட ஆடவரின் ஆண்மை ஒரு சிறிதும் குன்றாது. ஆண்—பெண் உறவுகொள்ளும் இன்பத்திற்குக் கிஞ்சிற்றும் குந்தகம் விளைத்திடாது. அறுவைக்குப் பின்னரும் மணவாழ்வின் இன்பத்தை என்றும்போல் தொடர்ந்து துய்த்தின்புற்றிட முடிகிறது.
11. 'வாசெக்டமி' செய்துகொண்ட காரணத்தால் ஜீரண சக்தியோ செயலாற்றலோ குறைவதில்லை.
12. இந்த 'வாசெக்டமி' அறுவை முறை 1959-ஆம்ஆண்டிலிருந்து தமிழகத்தில் செயல்பட்டு வருகிறது. இதுவரையில் நாலரை இலட்சத்திற்கு மேற்பட்டோர் அறுவைச் சிகிச்சை செய்துகொண்டுள்ளனர். அறுவைக்குப் பிறகு எந்தவிதமான கெடுதலும் ஏற்பட்டதாகத் தகவல் இல்லை.
13. எல்லா அரசினர் மருத்துவமனைகளிலும், பிரைமரி ஹெல்த் சென்டர்களிலும், மற்றும் அரசினரின் அங்கீகாரம் பெற்ற அறுவைச் சிகிச்சை நிலையங்களிலும், 'வாசெக்டமி' சிகிச்சையானது கட்டணம் ஏதுமின்றி இலவசமாகச் செய்யப்பட்டு வருகிறது.
14. இத்துறையில் நன்கு பயிற்சியும் அனுபவமும் மிகுந்துள்ள மருத்துவர்களைக் கொண்டே 'வாசெக்டமி' அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டு வருகிறது.
15. மீண்டும் கருத்தரிக்கச் செய்யும் ஆற்றலை ஊட்டுவதற்கான சாத்தியக்கூறுகளும் இப்போது அனுபவபூர்வமாகச் செயல்படத் தொடங்கியுள்ளன. எனவே 'வாசெக்டமி' செய்துகொண்ட தம்பதிகளுக்கு மீண்டும் குழந்தைப் பேறு கிட்டவே கிட்டாது எனும் அச்சமும் தேவையற்றது. மீண்டும் விரும்பினால், குழந்தைப் பேறு கிட்ட வாய்ப்பு உண்டு.
16. அரசினரின் அங்கீகாரம் பெற்ற அறுவைச் சிகிச்சை நிலையங்களில் 'வாசெக்டமி' செய்துகொள்ளும் தந்தையர் அனைவருக்கும் இழப்பீட்டுப் படியாக ரூ. 30 அளிக்கப்பட்டு வருகிறது. அறுவைக்குப் பின் தொடர்ந்து ஐந்து நாள் வேலை செய்யாமல் ஓய்வெடுக்கும் காலத்தின் ஊதிய இழப்பைச் சரிக்கட்டுவதற்காகவே இந்த இழப்பீட்டுப் படி அளிக்கப்பட்டு வருகிறது. ஐம்பது வயதுக்கும் குறைவான வயதையும் குறைந்தபட்சம் மூன்று குழந்தைகளையும் உடைய தந்தையர் மட்டுமே இந்த இழப்பீட்டுப் படியைப் பெறத் தகுதியுடையவர்கள் ஆவார்கள். மூன்று குழந்தைகளுக்குப் பிறகு குடும்பக் கட்டுப்பாடு செய்துகொள்ள 'வாசெக்டமி' அறுவை முறைதான் மிகச் சிறந்த முறையாகும்.

'வாசெக்டமி' அறுவை முறை தொடர்பாக மேல் விவரங்களுக்கும், தேவையான உதவிகளுக்கும் உங்களுக்கு அருகிலுள்ள அரசினர் மருத்துவமனை அல்லது பிரைமரி ஹெல்த் சென்டரில் உள்ள டாக்டரை அணுகுங்கள்.

இதற்கும் மேலாகத் தேவைப்படும் விவரங்கள் கிடைக்குமிடம்:—

1. மாநில குடும்பக் கட்டுப்பாடு மற்றும் பொதுச் சுகாதார இயக்குநர், 81, மவுண்ட் ரோடு, சென்னை-6.
2. துணை இயக்குநர், குடும்பக் கட்டுப்பாடு, 81, மவுண்ட் ரோடு, சென்னை-6.

## ஒழுங்குபடுத்தப்பட்ட...

(2-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

வேளாண்மை அமைச்சர் திரு. கோவிந்தசாமி தெரிவித்தார்.

இது தொடர்பாகப் பல துணைக் கேள்விகளுக்கு அமைச்சர் பதிலளிக்கையில் கூறியதாவது:—

ஒழுங்குபடுத்தப்பட்ட விற்பனைக் கூடங்கள் நமது மாநிலத்தில் எந்தவிதக் குறையும் சொல்ல முடியாத அளவுக்குச் சிறப்பாகச் செயல்படுகின்றன. அங்கு விவசாயிகள் நேரடியாகப் பொருள்களைக் கொண்டுவந்து கொடுத்து, நல்ல விலையை—அதுவும் உடனடியாகப் பெறுகிறார்கள். அங்கு சரியான எடையில் தரமான சரக்குகள்—தேவையான அளவுக்கு ஒரே இடத்தில் கேட்டுப் பெற வசதி இருக்கிறது.

தஞ்சை மாவட்டத்தில் மூடப்பட்ட விற்பனைக் கூடங்கள்—செம்பனார்கோயில், சீர்காழி, குற்றாலம், திருவாரூர், முத்துப்பேட்டை, கொரடாச்சேரி, அதிராம்பட்டினம், கும்பகோணம், பாபநாசம்.

## புதுடில்லியுடன் 'மோது'ங்கள்!

### மார்க்சிய கம்யூனிஸ்டுக் கட்சி உயர்மட்டக் கோரிக்கை

"விளைவு எத்தகையதாக இருந்தாலும், கேரளத்துக்கு உணவு மானியம் பெறுவதற்காகப் புதுடில்லியுடன் மோதிப் பாருங்கள்"

என்று கல்கத்தாவில் நடைபெற்று முடிந்திருக்கும் மார்க்சிய கம்யூனிஸ்டுக் கட்சியின் உயர்மட்ட அமைப்புக் கூட்டம் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியிருப்பதன் மூலம் கேரள அமைச்சரவையைக் கேட்டுக்கொண்டிருக்கிறது.

மக்களைப் பட்டினி போட்டு வேடிக்கை பார்க்கும் மத்திய அரசுக்கு எதிராக, 'மக்கள் போராட்டம்' ஒன்றை நடத்துமாறும் இக்குழு, கேரள மக்களைக் கேட்டுக்கொண்டிருக்கிறது!